அகரம் பேரூராட்சி முழுவதும்

# காவிரி கூட்டுக்குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன்!

## நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், ஜூலை 20-

அகரம் பேரூராட்சி முழுவதும் காவிரி கூட்டுக் குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க உறுதுணையாக இருப்பேன் என்று அகரம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியமல்லணம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 2026 சட்டமன்ற தொகுதியில் தனக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார். அகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட கோட்டூர் ஆவாரம்பட்டியில் தனது நன்றி தெரிவிக்கும் பிரச்சாரத்தை தொடங்கிய ஐ.பெரியசாமி அவர்கள் பாப்பணம்பட்டி, பெரிய மல்லணம்பட்டி, கருங்கல் பட்டி, ரெங்கப்பனூர், உல கம்பட்;டி, சுக்காம்பட்டி, லெட்சுமணம்பட்டி, காக்காதோப்பு ஆகிய கிராமங்களுக்கு சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

பெரிய மல்லணம்பட்டிக்கு வந்த முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஆரத்தி எடுத்து அதிர்வேட்டு முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்கள் மத்தியில் பேசிய ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 37 ஆண்டுகளாக தொகுதி மக்களோடு மக்களாக இணைந்து களப்பணி ஆற்றிவருகிறேன். 15 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தொகுதி மக்களுக் கான நலத்திட்டப் பணிகளை நான் என்றும் குறை வைத்தது கிடையாது. அதைப்போலத்தான் ஆத்தூர் தொகுதி மக்களும் என் மீது அளவில்லாத அன்பு கொண்டு என்னை தொடர்ந்து வெற்றிபெற வைத்துள்ளார்கள்.

அகரம் மற்றும் தாடிக் கொம்பு பேரூராட்சிக்கு எரியோடு பகுதியிலிருந்து காவிரி கூட்டுக்குடிநீர் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதுடன் அகரம் பேரூராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு சாலை வசதி தடையின்றி குடி தண்ணீர் வசதி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நன்றி தெரிவிக்கும் பிரச்சார கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்றத் தலைவர் கவிதா சின்னத்தம்பி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர்கள் நாகப்பன் ஜெயபால், மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், திண்டு;க்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நாள்!

## தயாநிதி மாறன் எம்.பி. வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 20 -

நேற்று 'தமிழ்நாடு நாளை' யொட்டி தயாநிதி மாறன் எம்.பி. விடுத்த வலைதளப் பதிவு வருமாறு:

தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் 'மெட்ராஸ் மாகாணம்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றுவதற்கு அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்கிற தீர்மானத்தை அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தினம் இன்று!

**வாழ்க தமிழ்நாடு!**

இவ்வாறு அப்பதிவில் தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.




ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுடன்

# காங்கிரஸ் ரகசியக் கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளது!

## கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றச்சாட்டு!



திருச்சூர், ஜூலை 20-

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.கவுடன் காங்கிரஸ் ரகசிய கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றம் சாட்டி உள்ளார்.

திருச்சூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பினராயி விஜயன், கேரள வக்ஃப் வாரிய மறு சீரமைப்பு விவகாரத்தில், பா.ஜ.க.வுக்கு ஆதரவாகவும், ஆர்.எஸ்.எஸ் மற்றும் சங் பரிவார அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்பவும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிவளைந்துகொடுப்பதாக குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளின் கொள்கைகளுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுக்காமல், மென்மையான இந்துத்துவா அரசியலை காங்கிரஸ் கையில் எடுத்துள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

அண்மையில் கேரளத்தில் நடைபெற்ற தேர்தல்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்கடிப்பதற்காக காங்கிரஸ், மற்றும் பா.ஜ.க ஒன்றிணைந்து ரகசியக் கூட்டணியை உருவாக்கிச் செயல்பட்டதாகவும் பினராயி விஜயன் குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.சுதாகரன், மார்க்சிஸ்ட் கட்சியினரிடம் இருந்து ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஷாகாக்களை பாதுகாத்ததாக அவரே பகிரங்கமாக ஒப்புக்கொண்டதையும் பினராயி விஜயன் சுட்டிக் காட்டினார்.

# "தமிழ்நாடு" எனும் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஜூலை 20-

"தமிழ்நாடு" எனும் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

எண்ணில்லா போராட்டங்களாலும், விலை மதிப்பில்லா உயிர்த் தியாகங்களாலும், நம் அன்னைத் தமிழ் நிலத்தின் பெயரை மீட்டளித்திட்ட நாள் இது.

நம் கழகம் பெற்ற அதிகாரத்தால், நம் தாய்நிலம் தலைநிமிர்ந்து, தெற்கிலிருந்து தொடங்கும் இத்துணைக் கண்டத்தின் வரலாற்றை முழங்கும் இனமானச் சொல்லாக நிலைப்பெற்றுவிட்டது, நம் தமிழ்நாடு!



பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய இந்நாளில், மாநில உரிமைகளைக் காத்திட உறுதிகொள்வோம்.

"தமிழ்நாடு" எனும் நம் தனிப்பெரும் அடையாளத்தை ஓங்கி ஒலிப்போம்!

இவ்வாறு கனிமொழி கருணாநிதி தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்

மாதவரம் 16, 19வது வட்டங்களில் ரூபாய் 3.50 கோடி செலவில் அமைக்கப்படவிருந்த

# மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தம் ரத்து செய்த த.வெ.க. அரசு!

## புழல் எம்.நாராயணன் கண்டனம்! - மழைக்கால நிவாரண மையக் கட்டிடம் தொடர்ந்து அமைக்க ஒப்பந்தம் கோர வலியுறுத்தல்!

மாதவரம், ஜூலை 20-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி வார்டு எண்கள் 16 மற்றும் 19 இல் பொதுமக்கள் மழைக்காலத்தில் சந்திக்கும் பேரிடர்களை களைய ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டப்படவிருந்த மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ததை நிறுத்தி வைத்து மீண்டும் பணிகளை துவக்க கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடம் திமுகவினர் மனு அளித்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16 மற்றும் 19வது வார்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவார்ந்த ஆலோசனையின் பேரில் 16 வது வார்டுக்கு உட்பட்ட கன்னியம்மன் பேட்டை, கன்னியம்மன் பேட்டை 2, சத்திரமேடு, கடப்பாக்கம், காமராஜபுரம், ஆண்டார்குப்பம், துவாரகா நகர், குளக்கரை, மணலி புதுநகர், எலந்தனூர், சடையங்குப்பம், பர்மா நகர், இருளர் காலனி ஆகிய பகுதிகளிலும் 19வது வட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மழைக்காலங்களில் பேரிடர்கள் ஏற்படும் நேரத்தில் மழை நீர் சூழ்ந்து பாதிக்கப்படும் மக்களை தங்க வைப்பதற்காகவும் அவர்களுக்கு என்று உணவு தயாரிப்பதற்காகவும் தனியாக மழை கால நிவாரண மையங்கள் அமைக்க ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டுமான பணிகள் துவங்கப்பட திராவிட மாடல் அரசில் ஒப்பந்தம் விடப்பட்டது.

பணிகள் துவங்குகின்ற நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால் பொதுமக்களின் நலனில் சிறிது மக்கள இல்லாமல் இப்பொழுது நடைபெறுகின்ற இந்த அரசு மேற்படி மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தங்களை ரத்து செய்துள்ளதாக அறிகிறோம். நாமும் விசாரித்த வகையில் திராவிட மாடல் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதால் அதை ரத்து செய்தது உண்மை என்று தெரிகிறது.

வார்டு 16 மற்றும் 19 பகுதிகளில் அடங்கிய கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் ஏழ்மை நிலையிலும் தினசரி வேலை செய்து பிழைப்பு நடத்தக் கூடிய நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள். மழை வெள்ள காலங்களில் எப்பொழுதெல்லாம் இந்த பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் முன்னாள் முதலமைச்சராக இருந்த அன்பு அண்ணன் தளபதி அவர்கள் நேரடியாக வருகை தந்து இந்த பகுதி மக்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்து அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தார். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மேற்படி பதினாறாவது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் நேரடியாக வருகை தந்து பேரிடர் காலங்களில் நிவாரண உதவிகளை வழங்கினார். அதன் அடிப்படையில் தான் மழைக்காலங்களில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கென உணவு தயாரிக்க குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மகளிர்கள் தங்குவதற்காக நிவாரணம் ஐயா கட்டிடங்கள் கட்ட உத்தரவிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன் இப்பணிகளை துவங்காமல் ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ததை அறிந்து நாங்கள் அதிர்ச்சியுற்றோம். பொது மக்களின் நலனில் அக்கறையோடு துவங்கப்பட்ட இந்த திட்டம் முடக்கப்படுவதை திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு இந்த பணிகள் உடனடியாக துவங்க தாங்கள் ஆவண செய்ய வேண்டும் என்றும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளும் அவர்களின் தேவைகளும் மழைக்காலத்தில் பூர்த்தி ஆகும் என்பதையும் வலியுறுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலர் திரு பத்மநாபன் அவர்களை நேரில் சந்தித்து நிறுத்தப்பட்ட ஒப்பந்தத்தினை மீண்டும் ஒப்பந்தம் கோரி மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவை அளித்தார். 19-வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், சடையங்குப்பம் முன்னால் கிராம செயலாளர் நைனியப்பன் உடன் இருந்தார். மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுத்து உடனடியாக பணிகள் துவங்க பரிசீலிப்பதாக மண்டல அலுவலர் உறுதி அளித்தார்.



கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்களின் திராவிட மாடல் அரசில் மாதவரம் சட்டமன்ற தொகுதி 16 மற்றும் 19வது வட்டங்களில் ரூபாய் 3.50 கோடி அளவில் அமைக்கப்பட இருந்த மழைக்கால நிவாரண மையத்திற்கான பணிகளை மீண்டும் துவக்க வலியுறுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டல அலுவலர் அவர்களிடம் கோரிக்கை மனுவை வழங்கினார்.

தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க

# தமிழ்நாடு நாளில் உறுதியேற்போம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 20-

கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**'மெட்ராஸ் மாகாணம்' என்றிருந்த நம் மாநிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என மாற்றிட பேரறிஞர் அண்ணா அவர்களால் சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்குரிய நாள் இன்று.**




**'தமிழர்கள் வாழும் பகுதிக்கு தமிழ்நாடு என்று கூட பெயர் சூட்ட முடியவில்லையே' என்ற தந்தை பெரியாரின் ஏக்கத்தையும், சங்கரலிங்கனாரின் தியாகத்தையும், தமிழ்ப்பெரியோர்கள் பலரின் விருப்பத்தையும் ஆட்சிக்கு வந்த நான்கே மாதங்களில் நிறைவேற்றிக் காட்டியது நம் திராவிட முன்னேற்றக் கழகம்.**

**அன்றைக்கு தீர்மானத்தை நிறைவேற்றி, 'தமிழ்நாடு' என்று அண்ணா அவர்கள் மும்முறை முழங்க, 'வாழ்க... வாழ்க...' என்ற உறுப்பினர்களின் முழக்கத்தால் சட்டமன்றமே உணர்ச்சிப் பெருக்கால் தத்தளித்தது.**

**அந்த இனிய தினத்தை தமிழ்நாடு நாளாக திராவிட மாடல் ஆட்சியில் நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.**

**தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க தமிழ்நாடு நாளில் உறுதி ஏற்போம்!**

**தமிழ் வெல்க!**

**தமிழ்நாடு வாழ்க!!**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் வேல்மாறன். இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில விவசாய அணி தலைவராக உள்ளார். கடந்த சில மாதங்களாக வேல்மாறன் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். இந்நிலையில் நேற்று அவர் இறந்தார் இது பற்றி தகவல் அறிந்த கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சருமான பொன்முடி வேல்மாறன் உடலுக்கு வீரபாண்டி கிராமத்திற்கு நேரில் சென்று மலர்வளையம் அமைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது குடும்பத்துக்கு ஆறுதலும் கூறினார். இந்த நிகழ்வில் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், பிரபு, லூயிஸ், முருகன், மணிவண்ணன், சக்தி சிவன், வெங்கட், ஐயப்பன், ராஜசேகர், ராமச்சந்திரன், பிரகாஷ், கணேசன், குணா, சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.